மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2022ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15ம் நாள் சனிக்கிழமை

இ.ம.எண்.04/2022
உள்
அசல் வழக்கு எண்.41/2020

-------------

1. குருநாதன்
2. சகுந்தலாகனி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. முருகேசன்
2. சந்திரமோகன் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு 03.08.2022ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 11.10.2022ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.மணிவண்ணன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தோன்றா தரப்பினராகியும், 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.மாரிச்சாமி அவர்கள் ஆஜராகி எதிர்உரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், மனுதாரர்கள் தரப்பு மனுவுரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17, 18-ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், தாவா பிராதை மனுவில் கண்டபடி சீர்திருத்தம் செய்து உத்தரவிடக்கோரி 03.08.2022ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2). மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-**

அசல் வழக்கானது 1வது இலக்கச் சொத்தை மனுதாரர்கள் அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ அவர்களது வகையாட்களோ எந்தவிதத்திலும் இடையூறு செய்யாத வகைக்கு வாதிகளுக்கு ஆதரவாக ஒரு நிரந்தர நிலையுறுத்துக்கட்டளை பரிகாரமும், 2ம் இலக்கச் சொத்தைப் பொதுப்பாதை என்று விளம்புகை பரிகாரமும் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் இம்மனுவில் 3, 4 உத்தேச பிரதிவாதிகளாக மனு செய்து அந்த மனுவானது இ.ம.எண்.02/2021 ஆக நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்பேரில் அசல் வழக்கில் 2ம் வாதிக்கு அடுத்ததாக 3, 4 பிரதிவாதிகளாக பதிவு செய்து வழக்கை மேல்நடத்த வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. இல்லாதுபோனால் மனுதாரருக்கு அநேக கஷ்ட, நஷ்டம் ஏற்படக்கூடும். எனவே, மனுவில் கண்டபடி பிராதை சீர்திருத்தம் செய்ய உத்தரவிடக்கோரி 03.08.2022ம் தேதி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3). இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

4). மனுதாரர் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் இல்லை.

5). மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. அபிடவிட்டு மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

**6). தீர்வு:-**

மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்உரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்களால் தாவா பிராதை மனுவில் கண்டபடி சீர்திருத்தம் செய்து உத்தரவிடக்கோரி 03.08.2022ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி

செய்யும்பட்சத்தில் மனுதாரர்களுக்கு தங்களது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும் நஷ்டமும் ஏற்படக்கூடும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரை எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு வாதுரை நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு தாவா பிராதை மனுவில் கண்டபடி சீர்திருத்தம் செய்து உத்தரவிடக்கோரி 03.08.2022ம் தேதி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:- இல்லை
எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்:- இல்லை

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.